# ஜெர்மனி அதிபருடன் பிரதமர் மோடி சந்திப்பு

செப்டம்பர் 10, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி 10 செப்டம்பர் 2023 அன்று புது தில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டின் இடையே, ஜெர்மனியின் அதிபர் திரு ஓலாஃப் ஸ்கோல்ஸை சந்தித்தார். பிப்ரவரி 2023 இல் அவர் மேற்கொண்ட இந்தியப் பயணத்தைத் தொடர்ந்து, இந்த ஆண்டு ஜெர்மனி அதிபரின் இரண்டாவது இந்தியா வருகை இதுவாகும்.

இந்தியாவின் ஜி20 தலைமையின் வெற்றிக்கு பிரதமருக்கு ஸ்கோல்ஸ் வாழ்த்து தெரிவித்தார். இந்தியாவின் ஜி20 தலைமையின்போது ஜெர்மனி பல்வேறு உயர்மட்ட கூட்டங்களில் பங்கேற்று வழங்கிய ஆதரவுக்காக பிரதமர் ஸ்கோல்ஸை பாராட்டினார்.

இரு தலைவர்களும் தங்கள் இருதரப்பு மூலோபாய கூட்டுறவின் முன்னேற்றத்தையும் மதிப்பாய்வு செய்தனர். பாதுகாப்பு, பசுமை மற்றும் நிலையான வளர்ச்சி, முக்கியமான கனிமங்கள், திறமையான பணியாளர்களின் பகிர்வு மற்றும் கல்வி போன்ற துறைகளில் ஒத்துழைப்பை ஆழமாக்குவதற்கான வழிகள் குறித்து அவர்கள் விவாதித்தனர்.

பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் தலைவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

அடுத்த ஆண்டு அரசுகளுக்கிடையேயான ஆலோசனைகளுக்கு இந்தியா வருமாறு அதிபர் ஸ்கோல்ஸை பிரதமர் அழைத்தார்.

**புது தில்லி**
**செப்டம்பர் 10, 2023**